[2012 ஏப்ரல் 18

உயர்வின் காரணமாக, அங்கே உள்ள மக்கள் மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பது வரைக்கும் மின்சாரக் கட்டணம் கட்டமாட்டோம் என்று போராட்டம் அறிவித்திருக்கிறார்கள். அதற்கும் நீங்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அதற்குத் தனிக் கேள்வி போடவும். தனி வாரியம் அமைப்பது, மின் கட்டணம் எல்லாம் இதில் வராது. எனவே, அதற்குத் தனிக் கேள்வி போடலாம்.*

அடுத்து, வினா வரிசை எண் 117, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

117—

சுற்றுலாத் தலம்

*__5463__—**திரு. வே. குணசீலன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, வந்தவாசி வெண்குன்றம் தவளகிரீஸ்வரர் மலைக் கோயில் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டத்தில் தென்னாங்கூர் திவ்ய திருத்தலத்திற்கு அருகில் அமைந்துள்ளது வெண்குன்றம் கிராமம். சுமார் 3,000 ஆண்டுகளுக்கு முன்னால் சித்தர்களால் உருவாக்கப்பட்ட இத்தலத்தில் 1,400 அடி உயரத்தில் உள்ள மலைமீது ஸ்ரீபர்வதவர்த்தினி சமேத ஸ்ரீதவளகிரீஸ்வரர் ஆலயம் உள்ளது. புராண காலங்களுக்குப் பிறகு ஆட்சி புரிந்த சோழ மன்னர்கள் புண்ணிய தமிழ் பூமியை 24 கோட்டங்களாகப் பிரித்து ஆட்சி புரிந்தனர். அதில், தொண்டை மண்டலத்தில் இருந்த 14 கோட்டங்களில் ஒன்று வெண்குன்றம்

2012 ஏப்ரல் 18]

ஆகும். இங்கே ஆன்மீகச் சுற்றுலா பயணிகள் அதிகமாக வருகின்றார்கள் என்றும், குறிப்பாக கார்த்திகை தீபத் திருவிழாவிற்கு சுமார் ஒரு இலட்சம் அளவிலே பக்தர்கள் வருகை தருகின்றார்கள் என்ற கருத்துரு பெறப்பட்டுள்ளது. காஞ்சிபுராணத்தில் கிரிவலப் பாதை அமைந்துள்ள இடம் 3 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை, புவனகிரி, தவளகிரி என்கின்ற வெண்குன்றம், வேதகிரி என்பனவாகும். எனவே, இதன் முக்கியத்துவம் கருதியே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் இந்த மலைப் பகுதியில் அத்தியாவசியமாகத் தேவைப்படக்கூடிய கோயிலில் மலைப் படிக்கட்டு அமைக்கும் பணி, குடிநீர் வசதி, புதிய பாதுகாப்பு வசதிகள் ஆகிய பணிகளைச் செய்ய இந்த நிதியாண்டிலேயே அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.

திரு. வே. குணசீலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், கழகத்தினுடைய பொதுச் செயலாளர், இன்றைய தமிழகத்தினுடைய முதலமைச்சர், எங்கள் வாழ்வின் ஒளிவிளக்கு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, வெண்குன்றம் தவளகிரீஸ்வரர் திருக்கோயில் மக்கள் பயன்பாட்டிலே இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினருடைய நிதியை அந்தக் கோயில் நிருவாகம் கேட்கின்றது. இதுகுறித்து அமைச்சரிடத்திலே நான் கடிதம் கொடுத்திருக்கின்றேன். அதைச் சுற்றுலாத் தலமாக்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி சுற்றுலாத் துறை சார்பாக, மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்வதற்கு ஆவன செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.*

திரு. வே. குணசீலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதியின் சார்பிலும், என்னுடைய சார்பிலும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

118—

ஆசிரியர் நியமனம்

****580—திருமதி ஆர். சாந்தி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியத்திலுள்ள பழங்குடியினர் உண்டி, உறைவிடப் பள்ளிக்கு ஆசிரியர் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியத்தில் வாழவந்திநாடு, அரசு பழங்குடியினர் உண்டி, உறைவிட மேல்நிலைப் பள்ளி மற்றும் செங்கறை அரசு பழங்குடியினர் உண்டி, உறைவிட மேல்நிலைப் பள்ளி ஆகிய 2 பள்ளிகளில் 844 மாணவ, மாணவியர் பயின்று வருகிறார்கள். மேலும், அரசு பழங்குடியினர் உண்டி, உறைவிட தொடக்கப் பள்ளிகள் இரண்டில் 167 மாணவ, மாணவியர் பயின்று வருகிறார்கள். தொடக்கப் பள்ளிகளில் அனுமதிக்கப்பட்ட